# கதைத் திருவிழா

## கந்தகத் திணை



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.Tamilacademy.com www.kids.noolagam.com

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

(பன்னாட்டுக் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கும் நிறுவனம்)

மற்றும்

# அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி

**(தன்னாட்சி)** சிவகாசி, இந்தியா.

இணைந்து தயாரிக்கும் பாடப் பொருள் உருவாக்கம்

## கந்தகத் திணை

# (கதைத் திருவிழா)


**சௌ. ஸ்டெல்லா புஷ்பா**

(ஆய்வுத் திட்ட உதவியாளர், அ.ஜா. கல்லூரி)

# கதை ஊஞ்சல்

கதை என்ற மாயாசால இலக்கியத்திற்குக் குழந்தைகளும் மயங்கும்; குவலயமும் மயங்கும். கதை கூறிக் கதை கூறிச் சோறூட்டும் அம்மா - பேரன் பேத்திகளைக் கூட்டம் சேர்த்துக் கொண்டு பாவனை உணர்வோடு ராசா கதை கூறும் பாட்டி - இதிகாசக் கதைகளை உயிர்பெற வைத்து உலாவ விடும் தாத்தா - பேய்க்கதைகளைப் பேசி அச்சமூட்டும் அண்ணன் எனப் பால்ய வயது முதலே உணவோடும் உணர்வோடும் உறவோடும் பிசைந்து ஊட்டப்பட்ட உணவுக் கவளங்களாகத் கதை கூறும் மரபு துளிர் விடுகின்றது.

கதையில் தன்னைக் காணும் உளவியலும் பிறரைக் காணும் உளவியலும் கதை இலக்கியத்திற்கான வெற்றிக் களங்களாகத் திகழ்கின்றன. கற்பனையும் கருத்தும் மொழியின் வளத்தோடு வாளின் வீச்சு போலக் கலந்து வெளிப்படும் பண்பாலும், விவரித்து விவரித்துக் கதை கூறும் பாணியாலும், பேசாத அஃறிணையைப் பேசும் உயிராகப் படைக்கும் திறத்தாலும் கதைப் படைப்பினைச் சிறக்கச் செய்திருக்கின்றார் ஆய்வுத்திட்ட மாணவி ஸ்டெல்லா புஷ்பா.

வாலை ஆட்டும் நாய் - முறைத்துப் பார்க்கும் பூனை - வாலுயர்த்தி ஓடும் அணில் - சிறகை விரிக்கும் குருவி - பூக்களைச் சுற்றித் திரியும் தேனீக்கள் - வாயினால் வலை வீட்டைப்; பின்னிக்கொள்ளும் சிலந்தி - சிற்றுடம்பு சுமக்கும் சுறுசுறுப்பான எறும்புகள் - பொதி சுமந்தும் தேய்ந்து போகாத கழுதைகள் - கருமையின் உச்சம் பெற்ற காகங்கள் - உழைப்பின் உச்சம் பெற்ற மாடுகள் - தந்திரத்தையே தத்தெடுத்துக் கொண்ட நரிகள் - குண்டு உடலோடு குதித்துத் திரியும் முயல்கள் போன்ற உயிரினங்களால் உயிர்பெற்றிருக்கின்றது கதைத்திருவிழா. கதைத்திருவிழாவில் குழந்தைகளுக்கான நற்பண்புகளும் வாழும் நெறிகளும் அன்பும் அறிவும் பேணும் முறைமைகளும் இடம்பெற்றுள்ளன. ஊஞ்சல் முன்னும் பின்னும் அசைந்து மகிழ்ச்சியை ஏற்படுத்தும். கதைத்திருவிழாக் கதைகளும் குழந்தைகளின் மனதிற்குள் முன்னும் பின்னும் அசைந்து இன்பம் சேர்க்கட்டும். '**கதைத் திருவிழா**' மின்-நூலாய் ஆக்கம்பெற அடித்தளமிட்ட கல்லூரி நிர்வாகத்தாருக்கு இதயம் கனிந்த நன்றியினைச் சமர்ப்பிக்கின்றோம்.

மாணவர்களின் படைப்பாற்றல் கலையை வளர்த்தெடுக்க உதவிய கல்லூரி மேனாள் தாளாளர் மதிப்புமிகு **வை. அய்யன் கோடீஸ்வரன்** அவர்களுக்கும், மாணவர்களின் புதுமைகளையும் ஆற்றல்களையும் ஆக்கம் நோக்கி ஆற்றுப்படுத்தும் கல்லூரித் தாளாளர் மேன்மைமிகு **கி. அபிரூபன்**, அவர்களுக்கும் கந்தகத்திணை இதயம் கனிந்த நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றது.

புதுமைப் படைப்பு நோக்கிப் பயணம் செய்ய அனுமதி வழங்கிய கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் **வ. பாண்டியராஜன்** அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர் **செ.அசோக்** அவர்களுக்கும் களிப்பு நிறை நன்றி!. துறையின் ஆக்கப்பணி கண்டு ஊக்கம் விதைக்கும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **க. சிவனேசன்** அவர்களுக்குக் கந்தகத்திணை நன்றியினை மொழிகின்றது.

அறம்சார்ந்த கதைகளைக் குழந்தை மொழியில் தர உதவிய தமிழ்க்கல்விக்கழகத்தின் தலைவர் மற்றும் செயலர் திரு. **இரா. வெங்கடேஷ்,** B.E., (PLM Leader in FORD, America) அவர்களுக்குக் கந்தகத் திணை நன்றி கலந்த வணக்கத்தினை உரித்தாக்குகின்றது.

*கதைகளோடு வாழ்வோம்! கதைகளைப் பகிர்வோம்! உறவுகளை வளர்ப்போம்!*

முனைவர் **ந.அருள்மொழி.**
ஒருங்கிணைப்பாளர், கந்தகத்திணை

# கதை வாயில்

மழலைகளின் மொழி கலப்படமில்லாதது; கள்ளங்கபடம் அற்றது. அம்மொழியில் குழந்தைகளுக்கு நல்லொழுக்கம் கற்பித்தல் அவர்களின் வேர்களுக்கு வலுவூட்டும்; வளர்ச்சிப் பாதையில் முட்களைத் தகர்க்கும்; பூக்களை மலரச் செய்யும்.

இன்றைய அவசர யுகத்தில் குழந்தைகளுக்குக் கதை சொல்வோர் அருகி விட்டனர். ஆனால், குழந்தைகள் தமக்கான கதைகளைத் தேடிக்கொண்டுதான் இருக்கின்றனர். குழந்தைகளுக்கு நல்லொழுக்கத்தைக் கற்பிக்கும் பொருட்டு இத்தொகுப்பிலுள்ள கதைகள் அமைந்துள்ளன. அன்பு, தூய்மை, தொலைநோக்குப் பார்வை, பொறுமை, வாய்மை, சுறுசுறுப்பு, கடமையுணர்வு, சகிப்புத்தன்மை ஆகிய நல்லொழுக்கக் கூறுகள் இக்கதைகளில் அமைந்துள்ளன. இந்நல்லொழுக்கக் கூறுகள் விலங்குகளின் வாழ்விலிருந்தும், அவற்றின் செயல்பாடுகளிலிருந்தும் எடுத்துக்கூறப் பெற்றுள்ளன.

விலங்குகளிலிருந்து குழந்தைகள் கற்றுக்கொள்ள ஏராளம் உண்டு. நாயின் அன்பும், தேனீக்களுக்கு அறிவுரை பகரும் சிலந்தியின் சுறுசுறுப்பும், காகத்தின் ஒற்றுமையும், விதைகளை மண்ணில் புதைத்து வாழும் அணிலின் தொலைநோக்குப் பார்வையும், மானின் நேர்மறைச் சிந்தனைப்பண்பும், காளையின் கடமையுணர்வும், எறும்பின் பகிர்ந்து வாழும் பண்பும், கழுதை தன் வாழ்வை அதன்போக்கில் ஏற்றுக்கொள்ளும் பாங்கும், சிங்கத்திடமிருந்து தப்பிக்கும் முயலின் அறிவுக்கூர்மையும் எனப் பல்வேறு சிந்தனைக் களங்களில் இயங்கும் கதைகள் குழந்தைகளுக்குப் பாடம் புகட்டுகின்றன. கதை கேளுங்கள்; கதை கூறுங்கள். மொழியும் கற்பனையும் வாழ்க்கை இயக்கத்தை விரித்துத்தர உதவட்டும்.

ஆய்வு மாணவரான எனக்குள் உறைந்து கிடந்த படைப்புத்திறனை வெளிக்கொணர வாய்ப்பளித்த கல்லூரி நிர்வாகத்தினருக்கும், மேனாள் தாளாளர் மதிப்புமிகு **வை. அய்யன்கோடீஸ்வரன்** அவர்களுக்கும், கல்லூரித் தாளாளர் மேன்மைமிகு **கி. அபிரூபன்** அவர்களுக்கும், கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் **வ.பாண்டியராஜன்** அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர் **செ.அசோக்** அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **க. சிவனேசன்** அவர்களுக்கும், தமிழ்த்துறைப் பேராசிரியர்களுக்கும் நன்றி கூறக் கடப்பாடுடையேன்.

தமிழ் மண்ணில் வேர்விட்டுப் புலம்பெயர் பூமியில் கிளை பரப்பிப் பூத்த மழலைச் செல்வங்களுக்குத் தமிழ்மொழி புகட்டும் திட்டத்தில் எனக்கு வாய்ப்பளித்த அமெரிக்கத் தமிழ்க்கல்விக் கழகத்தின் நிறுவனர் திரு. **இரா.வெங்கடேஷ்**, B.E., (PLM Leader in FORD, America) அவர்களுக்கு நன்றி.

*தமது புதுமையான அரிய சிந்தனைக் களத்தில் எங்களை வழிநடத்திச் செல்லும் கந்தகத்திணை ஒருங்கிணைப்பாளர் முனைவர்* **ந. அருள்மொழி** *அவர்களுக்கு நன்றி.*


என்றும் கதைகளுடன்,


**- செள. ஸ்டெல்லா புஷ்பா**

# கதைத் திருவிழா


| வ. எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | புத்தி புகட்டிய நாய் | 01 |
| 2. | தேனீக்களும் சிலந்தியும் | 03 |
| 3. | மனம் திருந்திய எறும்பு | 05 |
| 4. | காட்டுக்குப் போன கழுதை | 07 |
| 5. | காக்கா பாடும் பாட்டு | 09 |
| 6. | அணில் பிள்ளை | 11 |
| 7. | மாட்டிக் கொண்ட மாடு | 13 |
| 8. | குருவியின் கோபம் | 15 |
| 9. | புத்திசாலி முயல் | 17 |
| 10. | உண்மையில்லா நரி | 19 |

# புத்தி புகட்டிய நாய்







ஒரு வீட்டில் மணி என்ற நாயும் சுப்பு என்ற பூனையும் செல்லப் பிராணிகளாக வளர்ந்து வந்தன. மணி மிகுந்த அன்புடையது. அந்த வீட்டுக்காரர்களிடமும் அவர்கள் குழந்தைகளிடமும் வாலைக் குழைத்து விளையாடும். அதனால் அந்த வீட்டுக்காரர்களும் மணியை அன்புடன் பராமரித்து வந்தனர். சுப்புவுக்கும் கவனிப்புக்குக் குறைச்சல் இல்லை. ஆனால், சுப்பு எப்போதும் தன் பச்சைக் கண்களை வைத்து முறைத்தபடியிருக்கும். கொடுப்பதைத் தின்று விட்டுத் தூங்கும். குழந்தைகளிடம் கூட அன்பாக இருக்காது.



‘எல்லோரும் மணியைத் தான் கொஞ்சி வளர்க்கிறார்கள். நம்மை யாரும் கண்டுகொள்வதே இல்லை’ என்று சுப்பு நினைத்தது. மணிக்கு சுப்புவிடம் அன்பாகப் பழக ஆசை. மணி அருகில் நெருங்கினாலும் சுப்பு ‘மியாவ்...மியாவ்’ என்று கத்தி விட்டு அந்த இடத்தை விட்டே ஓடிவிடும்.

ஒரு நாள் சுப்பு தன் வாயில் ஓர் எலியைக் கவ்விக் கொண்டு வந்தது. எலி பரிதாபமாக கீச்கீச்சென்று கத்திக் கொண்டிருந்தது. சுப்புவிடம் இருந்து தப்பிக்க எவ்வளவோ போராடியது. ஆனால், அதனால் முடியவில்லை.







அப்போது அந்தப் பக்கமாக வந்த மணி இதைப் பார்த்து விட்டது. “நண்பனே அந்த எலியை விட்டுவிடு. அது பாவம். உனக்கு என்ன தீங்கு செய்தது? அதை விட்டுவிடு” என்று கேட்டுக்கொண்டது. ஆனால் சுப்புவோ “இது என்னுடைய உணவு. இதை உண்ணக் கூடாது என்று சொல்ல நீ யார்? உடனே இங்கிருந்து சென்று விடு. என் விஷயத்தில் தலையிடாதே” என்று திட்டியது.


கந்தகத்திணை

உடனே மணி சுப்புவின் மேல் பாய்ந்து சுப்புவின் கழுத்தைக் கவ்விக் கொண்டது. சுப்புவுக்கு மரண பயமே வந்துவிட்டது. "என்னை விட்டுவிடு என்னை விட்டுவிடு" என்று கெஞ்சியது. மணியோ "நீ எலியைக் கீழே விடு. நான் உன்னை விட்டு விடுகிறேன்" என்றது. சுப்பு மிகுந்த அச்சத்துடன் எலியை விட்டுவிட்டது. எலி தப்பிக் குதித்தோடியது.



மணியும் சுப்புவை விட்டுவிட்டது. "என்னை மன்னித்து விடு நண்பனே. அந்த எலியின் துன்ப நிலையை உனக்கு உணர்த்தவே இப்படிச் செய்தேன். உனக்கு வலி இருந்த மாதிரித்தானே எலியும் கஷ்டப்பட்டிருக்கும். இந்த வீட்டில் நம் எஜமானர்கள் நமக்கு என்ன உணவு தேவையோ அதைத் தருகிறார்கள். நாம் இராஜ வாழ்க்கை வாழ்கிறோம். இதைத் தவிர நமக்கு என்ன வேண்டும்? உயிர்களிடத்தில் அன்புடன் நடந்து கொள்" என்று அறிவுரை கூறியது.



சுப்புவும் அதைக் கேட்டு மனம் திருந்தியது.

* * *

# தேனீக்களும் சிலந்தியும்



ஒரு மரத்தில் ஓர் அழகிய தேன்கூடு இருந்தது. அந்தக் கூட்டிலிருந்த தேனீக்கள் அனைத்தும் மிகவும் சுறுசுறுப்புடன் இயங்கின. பூக்கள் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் தேடிச்சென்று தேனைச் சேகரித்து வந்தன. பெண் தேனீக்களும், ராணித் தேனீயும் கூட்டை நன்றாகப் பராமரித்து வந்தன. அனைத்துத் தேனீக்களும் கூட்டாகச் சேர்ந்து உழைத்தன, சுறுசுறுப்பாக இயங்கின.

ஒருநாள் மரத்தின் கிளைகளின் ஊடாகச் சிலந்தி ஒன்று வலை பின்ன ஆரம்பித்தது. ஒவ்வொரு நாளும் வலை புதிது புதிதான வடிவில் விரிவாகி வந்தது. ஒரு நாள் அதிகாலைப் பொழுதில் தேனீக்கள் ஓர் அற்புதக் காட்சியைக் கண்டன. சிலந்தியின் வலை மிகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் கட்டி முடிக்கப்பட்டிருந்தது.





வலையைக் கட்டி முடித்ததில் இருந்து சிலந்தி வலையை விட்டு இறங்கவே இல்லை. வலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டே இருந்தது. தூங்கும் நேரம் கூட அப்படியே தான் இருந்தது. அதைக் கண்டு தேனீக்களுக்கு ஒரு சந்தேகம். 'சிலந்தி எப்படி ஒரே இடத்தில் அசையாமல் நின்று கொண்டு உயிர் வாழ்கிறது? உண்டால் தானே உயிர் வாழ முடியும்? உணவிற்கு என்ன செய்கிறது? ' என யோசித்துக் கொண்டிருந்தன.



இப்படி யோசித்துக் கொண்டிருக்கையில் ஒரு சிறிய பூச்சி சிலந்தியின் வலையில் மாட்டியது. மாட்டிக் கொண்ட பூச்சி தனது சிறகுகளைப் படபடவென்று அடித்துக் கொண்டது. எவ்வளவு முயன்றும் அதனால் விடுபட முடியவில்லை. சிலந்தியோ மெதுவாக நகர்ந்து வந்து அலட்சியமாகப் பூச்சியைக் கவ்வித் தின்று விட்டது. இதைக் கண்ட தேனீக்கள் வியப்படைந்தன.



“இருக்கின்ற இடத்திலேயே இவனுக்கு உணவு கிடைக்கின்றது. நாமோ பல நூறு மைல்கள் கடந்து உணவைத் துன்பப்பட்டுச் சேகரித்து வருகிறோம். நாம் மட்டும் எதற்காக இவ்வளவு துன்பப்பட வேண்டும்? நாமும் நம் கூட்டிலேயே இருந்து கொள்ளலாம்... சிலந்தியைப் போலச் சுகமாக வாழலாம்” என்று பேசிக் கொண்டன தேனீக்கள்.



தேனீக்கள் பேசியது சிலந்தியின் காதுகளிலும் விழுந்தது. “முட்டாள்களே! ஏன் இப்படிச் சிந்திக்கிறீர்கள்? ” என்று கோபமாகக் கேட்டது சிலந்தி.



“என்ன நாங்கள் முட்டாள்களா... இருந்த இடத்தில் இருந்து கொண்டே உண்டு உயிர் வாழ்கிறாயே... நீ தான் சோம்பேறி... நாங்கள் ஒன்றும் முட்டாள்களல்ல” என்று கோபமாகப் பதில் கூறின தேனீக்கள்.



சிலந்தி அமைதியாக, “நான் இரையாக உண்ணும் பூச்சிகளை விட நான் பலவீனமானவன். எனக்கான இரையை இப்படித்தான் பெற்றாக வேண்டும். பூச்சிகளின் இருப்பிடத்திற்கே சென்று அவற்றைக் கொன்று தின்ன நினைத்தால் நானே அவற்றிற்கு இரையாகி விடுவேன். அதனால் தான் இப்படி வலையைக் கட்டி அதில் இரையைச் சிக்க வைத்துச் சாப்பிடுகிறேன்”

“ஓ... அப்படியா? ” என்று தேனீக்கள் விழிகளை விரித்தன.




“அதிலும் இந்த வலையைக் கட்டி முடிக்க எவ்வளவு கஷ்டப்பட வேண்டும் தெரியுமா? வலை கட்டிக் கொண்டிருக்கும் போதே காற்றினால் அறுந்து விடும். மனிதர்கள் கலைத்து விடுவார்கள். இப்படி ஏகப்பட்டதுன்பங்கள் எனக்கு”


“ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான போராட்டம்” என்று தேனீக்கள் “உச்” கொட்டின.

“என் துன்பங்களை விட உங்களுடைய வாழ்க்கை எவ்வளவோ எளிதானது; அழகானது. தினமும் அழகான பூக்களைத் தேடிச் செல்கிறீர்கள். இனிமையான தேனைச் சேகரித்து உண்டு வாழ்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையின் அழகை நினைத்து நீங்கள் மகிழ்ச்சியாக வாழுங்கள். அடுத்தவரைப் பார்த்து உங்களை மாற்றிக் கொள்ள நினைக்காதீர்கள்” என்று அறிவுரை கூறியது. தேனீக்களும் தங்களின் தவற்றை உணர்ந்து பூக்களைத் தேடிப் பறக்க ஆரம்பித்தன.

* * *



# மனம் திருந்திய எறும்பு



அது ஓர் அழகான காடு. அந்தக் காட்டில் இருந்த எறும்புப் புற்றுகளில் எறும்புகள் வாழ்ந்து வந்தன. அந்தப் புற்றில் ‘மூக்கக்கா’ எறும்புதான் வயதான எறும்பு. மூக்கக்கா கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும். அதன் பேச்சை எல்லா எறும்புகளும் கேட்கும்.


ஒருநாள் மூக்கக்கா எறும்பு எறும்புப் பிள்ளைகளே! எறும்புப் பிள்ளைகளே! உணவு சேகரிக்கப் போகலாம், வாருங்கள் என்றது. எல்லா எறும்புகளும் அணிவகுத்து நின்றன. அந்தக் கூட்டத்தில் இருந்து செங்கருப்பி மட்டும் ஒதுங்கி நின்றது.

“செங்கருப்பி! செங்கருப்பி! கூட்டத்தோடு சேர்ந்து நில்!” என்றது மூக்கக்கா. உடனே செங்கருப்பி, “இன்று முதல் நான் தனியாகச் செல்லப் போகிறேன், அதோ எனக்கென்று தனியாகப் புற்றும் கட்டிக் கொண்டேன்” என்றது. “வேண்டாம் செங்கருப்பி! கூட்டமாகப் போவோம். கூட்டமாக உணவு சேகரிப்போம், கூட்டமாகப் பகிர்ந்து உண்போம்! கூட்டமாகப் ஒரே புற்றினுள் வாழ்வோம்” என்றது மூக்கக்கா. “கூட்டமாக வாழ்ந்து சலித்துவிட்டது, சுதந்திரமாகச் சுற்றப் போகிறேன் என்று செங்கருப்பி மறுத்தது. சுதந்திரம் என்று கூறி எங்காவது சிக்கிக்கொள்ளப் போகின்றாய் எனப் பிற எறும்புகளும் எச்சரித்தன. செங்கருப்பி அனைவரின் அறிவுரையையும் உதாசீனம் செய்தது.




செங்கருப்பி தனியாக ஓடி ஓடி உணவு சேகரித்தது. தனியாக உண்டது. உண்டதுபோக எஞ்சிய உணவைப் புற்றுக்குள் பதுக்கியது. செங்கருப்பி யார் சொல்வதையும் கேட்காமல் தன் இஷ்டத்திற்கு வாழ்ந்து வந்தது.

ஒருநாள் செங்கருப்பி பெரிய சர்க்கரைக் கட்டியைப் பார்த்தது. அடேங்கப்பா! எவ்வளவு பெரிய உணவு... ஓராண்டுக்கு இந்த உணவே போதும் என நினைத்தது. சுற்றுமுற்றும் பார்த்து மற்ற எறும்புகள் பார்க்கும் முன் புற்றுக்குள் பதுக்கிவிட நினைத்து விரைவாகச் செயல்படத் தொடங்கியது. சர்க்கரைக் கட்டியை வேகமாக இழுத்தது, சர்க்கரைக் கட்டியோடு புற்றின் அருகே வந்து சேர்ந்தது.



புற்றுக்குள் சர்க்கரைக் கட்டியைத் தள்ளியது. அந்தோ பரிதாபம்! புற்றினுள் அந்தப் பெரிய கட்டி நுழையவில்லை. செங்கருப்பி யோசித்தது. புற்றினுள் வேகமாகச் சென்றது. சர்க்கரைக் கட்டியை இழுத்தது.








எறும்பு எதிர்பார்க்காத ஆபத்து ஒன்று நிகழ்ந்து விட்டது. சர்க்கரைக் கட்டி புற்றின் மேல் துளையைச் சரியாக அடைத்துக் கொண்டது. செங்கருப்பியால் அதை உள்ளே இழுக்கவும் முடியவில்லை. புற்றை விட்டு வெளியே வரவும் முடியவில்லை என்ன செய்வதென்று தெரியவில்லை. சர்க்கரைக் கட்டியைத் தின்று கரைத்து விட்டால் வெளியே வந்து விடலாம் என நினைத்துத் தின்ன ஆரம்பித்தது. ஆனால், எவ்வளவு தான் தின்ன முடியும். தின்று முடிப்பதற்கு முன் மூச்சு முட்டி இறந்து விடும் போல் இருந்தது.



செங்கருப்பிக்கு மிகவும் பயம் வந்து விட்டது. யாராவது உதவிக்கு வருவார்கள் என நம்பி, "மூக்கக்கா, கருப்பக்கா... அண்ணே! என்னைக் காப்பாற்றுங்கள்.... நான் உள்ளே மாட்டிக் கொண்டேன்.. தயவு செய்து காப்பாற்றுங்கள்" என்று கத்தியது ஆனால், எறும்பு கத்தியது வெளியில் இருந்த மற்ற எறும்புகளுக்குக் கேட்கவில்லை. எறும்பு சோர்ந்து போய்விட்டது. "நமக்கு இந்தக் கூட்டிலேயே சமாதி தான்... யார் வந்து நம்மைக் காப்பாற்றுவார்கள்? மற்ற எறும்புகளைப் போல ஒற்றுமையாக வாழ்ந்திருந்தால் இந்த நிலை வந்திருக்குமா? இந்தத் தண்டனை தேவை தான்... இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என்று அழுதது.

திடீரென மழை பெய்ய ஆரம்பித்தது. சர்க்கரைக் கட்டி மழையில் கரைந்தது. மனம் திருந்திய எறும்பு மகிழ்ச்சியாக வெளியே வந்தது. "மூக்கக்கா! மூக்கக்கா என்னை உங்களோட சேர்த்துக் கொள்ளுங்கள்...!" என்றது. மூக்கக்கா செங்கருப்பியை அன்பால் தழுவிக் கொண்டது.





✻ ✻ ✻

# காட்டுக்குப் போன கழுதை



ஒரு கிராமத்தில் சலவைக்காரரின் வீட்டில் சுமையான் என்ற கழுதை வசித்து வந்தது. அழுக்குத் துணிகளை ஆற்றுக்குச் சுமந்து செல்வதும் துவைத்த துணிகளை வீட்டுக்குக் கொண்டு வருவதும் சுமையானின் வேலை. சுமையானுக்கு இனியான் என்ற கழுதை நண்பனாக இருந்தது.


"இனியான்...இனியான்..." என சுமையான் அழைத்தது.

கனைத்துக் கொண்டே " என்ன? " என்றது இனியான்.

"எப்போதும் இதே பாடு தானா நமக்கு? மனிதர்களின் பொதிகளைச் சுமப்பதே வேலையாகி விட்டது. நம் மூதாதையரும் இந்த வேலையைத் தான் செய்தனர். நமக்குப் பின்வரும் சந்ததியினரும் இந்த வேலையைத் தான் செய்ய வேண்டும்... என்ன செய்வது.... அதிலும் இந்த சலவைக்காரர்கள் நாம் எவ்வளவு பொதி சுமந்து கொடுத்தாலும் நம்மை மதிப்பதே இல்லை" என்று இனியானிடம் புலம்பியது.

இனியான் "சுமையான் நீ நினைப்பது தவறு. நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்க்கைக்காக ஏதாவது ஒரு வேலை செய்து தான் ஆக வேண்டும். நாம் துணிகளைச் சுமந்து வருகிறோம். அவர்கள் நம்மைப் பராமரித்து வளர்க்கிறார்கள். நாம் தனியாகச் சென்று விட்டால் உணவுக்கு என்ன செய்வோம். தெருவில் கிடக்கும் குப்பைகளை அல்லவா உண்ண வேண்டியிருக்கும்"

சுமையானோ, "எது எப்படியோ... நான் சுதந்திரமாக வாழ்ந்தாக வேண்டும். பேசாமல் காட்டிற்குச் சென்று விட வேண்டியதுதான்... இந்தச் சலவைக்காரனின் பிடியிலிருந்து விடுபட்டால் போதும்" என்றது. இனியானும் "இனி நீ பட்டுத்தான் திருந்த வேண்டும்" எனக் கூறி அந்த இடத்தை விட்டு நகர்ந்தது.



முதன்முதலாகக் காட்டிற்குள் நுழைந்த சுமையானுக்கு அந்தப் புதுமையான சூழ்நிலை மிகவும் பிடித்திருந்தது. அதுவரை பார்த்தறியாத மரங்கள், செடிகள், விலங்குகள், பூக்கள் கண்ணைக் கவர்ந்தன. காட்டிலிருந்த விலங்குகள் சுதந்திரமாகச் சுற்றித்திரிந்தது சுமையானை மிகவும் கவர்ந்தது.

‘ஆஹா! என்ன அருமையான வாழ்க்கை. இந்தக் காட்டு வாழ்க்கையை விட்டுவிட்டு அங்குபோய் அடிமைப்பட்டுக் கிடந்தோமே’ என்று நினைத்து மகிழ்ந்தது.

காட்டில் வாழ்ந்த நரி சுமையானைப் பார்த்து, ‘ஐ... கழுதை!’ என்று குதித்தது. ‘இங்கிருக்கும் விலங்குகளையே சாப்பிட்டு அலுத்துப் போய் விட்டது என்று சிங்கராஜா சொன்னாரே? நாம் இதைப் பிடித்துக் கொண்டுபோய்க் கொடுத்தால் நம் சேவையைப் பாராட்டி மந்திரி பதவியே கொடுத்து விடுவார்’ என்று முடிவு செய்து சுமையானின் அருகில் சென்றது.

“கழுதையாரே..... எங்கள் காட்டின் தளபதியே! உங்களைக் காட்டு விலங்குகளின் சார்பாக வணங்கி வரவேற்கிறேன்” என்றது.




உடனே சுமையான், “என்ன காட்டின் தளபதியா?!!” என்று வியப்புடன் கேட்டது.

“ஆமாம்.... சிங்கராஜா உங்களைப் பார்த்தாராம். இங்கிருக்கும் விலங்களுக்கெல்லாம் வீரம் இல்லையாம். உங்களைப் பார்த்ததும் உங்கள் உடல் உறுதியைக் கண்டு நீங்கள் தான் காட்டின் தளபதியாக இருக்க வேண்டும் என உறுதியாகச் சொல்லி விட்டார்... உங்களை உடனடியாக அழைத்துவரச் சொன்னார் என்று தந்திரமாகக் கூறியது.

சுமையான் அகமகிழ்ந்து ‘காட்டிற்குள் நுழைந்தவுடனே பதவியா? காடு நல்ல மனசு உள்ளவர்கள் வாழும் இடம் போலத் தெரிகிறதே’ என்று நினைத்தது. நரியின் ஏமாற்று வேலை தெரியாமல் பலியாடு போல நரியின் பின்னே சென்றது.

நரி சுமையானைச் சிங்கத்தின் குகை வாயிலில் நிற்க வைத்து விட்டு, “நீங்கள் இங்கேயே இருங்கள். ராஜாவிடம் அனுமதி கேட்டு வருகிறேன்” என்று உள்ளே சென்றது. உள்ளேயிருந்த சிங்கத்திடம், “சிங்க ராஜாவே, புதிதாக ஓர் இரையைக் கொண்டு வந்திருக்கிறேன். இதுவரை நீங்கள் சாப்பிடாதது. வாருங்கள் உண்டு மகிழுங்கள்” என்று அழைத்தது. சிங்கமும் உமிழ்நீர் சுரக்கப் புதிய இரையைத் தேடி ஆவலுடன் சென்றது.






நரி சிங்கத்திடம் பேசியதை சுமையான் ஒட்டுக் கேட்டது. கேட்டவுடன் பின்னங்கால்கள் பிடரியில் பட ஒரே ஓட்டமாக ஓடித் தப்பித்தது.

✲ ✲ ✲

# காக்கா பாடும் பாட்டு



ஒரு காட்டில் இருந்த மரத்தில் குயிலும் காக்கையும் வசித்து வந்தன. குயில் அழகாகப் பாடும். குயிலின் பாட்டைக் கேட்க காட்டிலிருக்கும் விலங்குகளெல்லாம் மரத்தின் முன் கூடி விடும். இப்படியே குயிலின் பாட்டுச் சிறப்பு காடெங்கும் பரவியது.

காக்கைக்கு இது கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. ‘பெரிய பாட்டாம் பாட்டு... இது பாடுகிறதாம்... அதுகளும் கேட்கின்றனவாம்... இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்டுகிறேன். ஏன்... குயில் தான் பாடுமா? எனகெல்லாம் பாட்டு வராதா? நானும் பாடுவேன்’ என்று நினைத்த காக்கை பாடுவதற்கு முயற்சி செய்தது.

குயிலைப் போல் பாடுவதாக நினைத்துக் கொண்டு ‘கா...கா...’ என்று கத்த ஆரம்பித்தது. முதலில் காக்கை இயல்பாகக் கத்துகிறது என்று நினைத்த விலங்குகள், காகம் தொடர்ந்து கத்திக் கொண்டிருப்பதைக் கேட்டுத் தங்கள் காதுகளை மூடிக்கொண்டன.


“ஏய் காக்கையே....! நிறுத்து உன் கூச்சலை... உன் இரைச்சலில் எங்களுக்குக் காது செவிடாகிவிடும் போல” என்று நரி அதட்டியது.



உடனே காகம் “ஏன் அந்தக் குயில் பாடுவதைக் கேட்டால் உன் காது செவிடாகவில்லையா? குயில் பாடினால் உனக்கு இனிமையாக இருக்கிறது... நான் பாடினால் உனக்குக் கசக்கிறதா? நான் பாடத்தான் செய்வேன்” என்று கூறிவிட்டு மீண்டும் பாட ஆரம்பித்தது.

குயிலின் பாட்டையும் உன் கூச்சலையும் ஒப்பிடுகிறாயா? மூடக் காக்கையே... இப்போது நீ நிறுத்தவில்லை என்றால் உன் குரல்வளையைப் பிடித்துக் கடித்து விடுவேன்... நிறுத்து என மிரட்டியது.

அப்போது அந்த வழியே வந்த மான் நரியிடம் “ஏன் நீ காக்கையை மிரட்டுகிறாய்... அது என்ன தவறு செய்தது” என்று கேட்டது. நரியும் “இவன் பாட்டு என்ற பெயரில் தொல்லை படுத்திக் கொண்டிருக்கிறான்” என்றது. “நானா தொல்லை செய்கிறேன். கேள் மானே..... குயில் பாடுவதை ரசித்துக் கேட்கின்ற இவர்கள்.... நான் பாடினால் தொல்லை என்று சொல்லி என்னை அவமதிக்கிறார்கள்... என்னவென்று கேள்” என்றது காக்கை.



மானுக்குக் காக்கையின் செயலுக்கான காரணம் புரிந்தது. காக்கையிடம், “அன்புள்ள காக்கையாரே.. நான் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்டுவிட்டுப் பிறகு நீங்கள் பாடுங்கள்” என்று பணிவாக வேண்டியது.



“காக்கையாரே... நீர் உண்மையிலேயே குயிலை விட உயர்ந்தவர்... குயிலுக்குப் பாட மட்டும் தான் தெரியும். நீயோ இனிய குரலால் அழைத்து ஒற்றுமையோடு சேர்ந்து உண்ணுவாய். குயில் தான் இடும் முட்டைகளை உங்கள் கூட்டில் வைத்துவிட்டுப் போய்விடும். குயிலின் தந்திரம் உங்களுக்கும் தெரியும். ஆனால் நீங்கள் அதைத் தவறாக நினைக்காமல் குயிலின் குஞ்சுகளை வெறுக்காமல் அவை சிறகு முளைத்துப் பறக்கும் வரை பராமரிப்பீர்கள்... அந்த அழகான பண்பை விடவா குயிலின் குரல் அழகானது... அதனால் நீ குயிலைப் போல மாறவேண்டுமென நினைக்காதே... நீ நீயாகவே இரு” என்று கூறிவிட்டு மான் சென்றது.

மானின் சொற்களைக் கேட்ட காகமும் மகிழ்ச்சியடைந்து தன் மூடத்தனத்தைக் கைவிட்டது.

✲ ✲ ✲

# அணில் பிள்ளை



ஒரு மரத்தில் ஓர் அணில் குடும்பம் வசித்து வந்தது. அம்மா அணில், அப்பா அணில், பிள்ளைகள் என்று மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தன. பெற்றோர் அணில்களைப் போலவே அணில் பிள்ளைகளும் மிகவும் சுறுசுறுப்பானவை. எப்போதும் ஓடியாடித் திரிந்து கொண்டிருக்கும்.



எல்லா அணில் பிள்ளைகளும் சுறுசுறுப்பாக இருந்தாலும் சும்பு அணில் மட்டும் சோம்பேறியாக இருந்தது. மற்ற அணில்களோடு விளையாடாமல் சோம்பேறியாக இருக்கும். உணவு கொண்டு வந்து தந்தால் தின்னும். தின்று விட்டுப் படுத்துத் தூங்கும். மற்ற எல்லா அணில்களும் சுறுசுறுப்பாக இருக்க சும்பு மட்டும் சோம்பேறியாக இருக்கிறதே என்று சும்புவின் பெற்றோர்கள் கவலைப்பட்டனர். எவ்வளவு அறிவுரை சொல்லயும் சும்பு திருந்தவே இல்லை.



ஒரு நாள் சும்பு குடும்பத்தின் நெருங்கிய உறவினரான அணில் மாமா வந்தார். எல்லோரையும் நலம் விசாரித்தார். அப்போது அந்த சும்புவைப் பற்றிப் பெற்றோர்கள் புகார் செய்தனர்.

சும்புவை அணில் மாமா வெளியே அழைத்துச் சென்றார். மாமா சும்புவிடம் ஓர் அழகான அருவியைக் காட்டினார்.



“இது என்னவென்று தெரியுமா சும்பு?”

“ம்.. தெரியுமே மாமா இதுதான் அருவி”

“மிகவும் சரியாகச் சொன்னாய்.. நீ புத்திசாலி தான்.. இது எதிலிருந்து உருவாகின்றது? ” என்று அடுத்த கேள்வியைக் கேட்டார்.

“மலை உச்சியிலிருந்து விழுவதாக அம்மா சொல்லியிருக்கிறார்” என்றது சும்பு.

“ரொம்ப நல்லது சும்பு.. எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருக்கிறாய். அதோ தெரிகிறது பார் மலையின் உச்சி. அங்கே ஓர் ஊற்று இருக்கிறது. அந்த ஊற்றிலிருந்து வரும் தண்ணீர் இங்கு அருவியாகக் கொட்டுகிறது”

“ம் ஊற்றிலிருந்து அருவி உருவாகிறதா? ”

“ஆமாம் சும்பு... அந்த ஊற்று அங்கேயே தங்கி விட்டால் என்ன ஆகும் தெரியுமா? புழுவும் பூச்சிகளும் மிதக்கின்ற குட்டையாகி விடும். அது ஓடிக்கொண்டே இருப்பதால் தான் அழகான அருவி உருவாகிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது. நாமும் அந்தத் தண்ணீரைப் போல ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். அப்போது தான் நம் வாழ்க்கையும் இந்த அருவியைப் போல அழகாகும். இல்லையென்றால் குட்டையைப் போல் நம் வாழ்க்கை தேங்கி விடும் புரிகிறதா? ” என்று மாமா கூறினார்.



மாமா அப்படிச் சொன்னவுடன் சும்புவிற்குத் தன் தவறு புரிந்தது. இனி சோம்பேறியாக இல்லாமல் அருவியைப் போல் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும் என முடிவு செய்தது.

* * *

# மாட்டிக் கொண்ட மாடு



ஒரு விவசாயி சுங்கன், ரங்கன் என்ற இரண்டு காளை மாடுகளை வளர்த்து வந்தான். அதில் சுங்கன் மாடு பெரிய சோம்பேறி. விவசாயி கொடுக்கும் புண்ணாக்கையும் கழனித் தண்ணீரையும் வயிறு முட்டச் சாப்பிட்டு விட்டு சோம்பேறியாக படுத்துத் தூங்கும். ரங்கன் மாடோ நல்ல சுறுசுறுப்பு. விவசாயி வண்டி ஓட்டவும், ஏர் பிடிக்கவும், கமலை இறைக்கவும், செக்கு இழுக்கவும் எல்லா வேலைகளுக்கும் ரங்கன் மாட்டைத் தான் பயன்படுத்துவான்.


ரங்கன் மாடு பகல் முழுதும் கடுமையாக வேலை செய்துவிட்டு இரவில்தான் கொட்டிலுக்கு வரும். களைத்துப் போய் வரும் ரங்கனை சுங்கன் கேலி செய்து கொண்டே இருக்கும்.

இப்படியே நாட்கள் கடந்து கொண்டிருந்ததன. ஒருநாள் ரங்கன் மாட்டிற்கு நல்ல வேலை. கடுமையாக வேலை செய்ததால் கால்கள் சோரப் படுத்துக் கிடந்தது. அதைக் கண்ட சுங்கன் மாடு, உன்னைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. ஏன் உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்கிறாய்... இந்த மனிதனுக்கு உழைத்துக் கொடுக்க வேண்டுமென்று உனக்கென்ன தலையெழுத்தா...? என்று கேட்டது.





அதைக் கேட்டு ரங்கன் மாடு, ஆமாம்... நமக்கு இந்த மனிதன் உணவும் இருக்க இடமும் கொடுத்துப் பாதுகாக்கிறானல்லவா ...? நம்மைக் குளிப்பாட்டி சுத்தம் செய்து... ஏதாவது நோய் வந்தால் பேணிப் பராமரித்து சிறுவயதிலிருந்து நம்மை வளர்க்கிறானல்லவா...? வேலை செய்துதானே ஆக வேண்டும்? என்றது.




“அதெல்லாம் தேவையில்லை... இவன் கொடுக்கும் புண்ணாக்கிற்கும் கழனித் தண்ணீருக்கும் இவ்வளவு வேலை செய்ய வேண்டுமா? நாளைக்கு நான் சொல்கிற மாதிரி செய்... எழுந்திருக்கவே முடியாதபடி படுத்துக் கிட... விவசாயி எழுப்பினாலும் எழும்பாதே... உன்னை விட்டு விடுவான்” என்றது சுங்கன் மாடு.




ரங்கன் மாட்டுக்கும் ஒருநாள் அப்படி இருந்து பார்த்தால் என்ன என்று தோன்றியது. அவ்வாறே மறுநாள் விவசாயி எழுப்பிய போது அது எழும்பவே இல்லை. படுத்தே கிடந்தது.

விவசாயி யோசித்தான், ‘பாவம் ரங்கன்... தினமும் எவ்வளவு கடுமையாக உழைக்கிறது. வேலை செய்து வேலை செய்து இப்படி உடம்புக்கு முடியாமல் கிடக்கிறது போல.. ரங்கன் கொஞ்சம் ஓய்வெடுக்கட்டும். சுங்கன் தினமும் தின்று தின்று தூங்கித் தானே கிடக்கிறது. கொஞ்ச நாட்கள் சுங்கன் வேலை செய்யட்டும்’ என்று சுங்கன் மாட்டை எழுப்பிக் கட்டி இழுத்துப் போனான்.



இத்தனை நாட்கள் எந்த வேலையும் செய்யாமல் இருந்த சுங்கன் மாட்டிற்கு வேலை மிகவும் கடுமையாக இருந்தது. இன்னொரு மாட்டையும் தன்னைப் போல் சோம்பேறியாக்க நினைத்தற்குத் தகுந்த தண்டனையை அனுபவித்தது.




# குருவியின் கோபம்



கீச்கீச் என்று கத்திக்கொண்டு அணில் வந்தது. குருவி “அணில் நண்பா! எனக்கு நீ என்ன கொண்டு வந்திருக்கிறாய்? ” என்று கேட்டது. “உனக்குப் பிடித்த நாவல் பழம் கொண்டு வந்திருக்கிறேன்” என்று குருவியிடம் பழத்தைக் கொடுத்தது அணில்.

அணில் தனக்கு ஒரு பழம் கிடைத்தால் குருவிக்குக் கொடுத்துவிட்டுப் பின்புதான் சாப்பிடும். அதுபோலத் தான் குருவியும் என்ன கிடைத்தாலும் அணிலுக்குக் கொடுக்காமல் சாப்பிடாது.



குருவிக்குப் பழத்தின் விதைகள், கொட்டைகள், பருப்புகள் என்றால் மிகவும் பிடிக்கும். அது அணிலுக்கும் தெரியும். ஆனால் அணில் பழத்தைத் தின்று விட்டுக் கொட்டைகளை மண்ணைத் தோண்டிப் புதைத்து விடும். பல நாட்களாக அணில் இப்படியே செய்து கொண்டிருந்தது. அணிலின் செயல் குருவிக்கு வருத்தத்தையும் கோபத்தையும் கொடுத்தது.



‘கொட்டைகளை என்னிடம் கொடுத்தாலும் நான் தின்பேனே? இப்படி மண்ணில் கொண்டுபோய் புதைக்கிறதே? மண்ணில் மட்கும் விதையை எனக்குத் தந்தால் என்ன? ’ என மனதிற்குள் கவலைப் பட்டது.



ஒருநாள் பலாப்பழத்தின் சுளை ஒன்றை அணில் எடுத்து வந்து குருவிக்குச் சாப்பிடக் கொடுத்தது. குருவிக்கு பலாப் பழம் பிடிக்கும். அதைவிட அதன் கொட்டை தான் மிகவும் பிடிக்கும். அதனால் பழத்தைத் தின்று விட்டு கொட்டையையும் தின்ன முயற்சித்தது குருவி.




அதைக் கண்ட அணில், "நண்பனே... அந்த விதையை என்னிடம் கொடு" என்று கேட்டது. அணில் அப்படிக் கேட்டதும் குருவிக்கு மிகவும் கோபம் வந்தது. "எனக்குப் பலாப் பழத்தின் கொட்டை மிகவும் பிடிக்கும் என்று உனக்கும் தெரியும்... தெரிந்தும் நீ என்னிடமிருந்து இதைக் கேட்பது சரியா? " என்று கோபமாகக் கேட்டது,

அணில் மிகவும் அமைதியாக, "நண்பனே... உனக்கு பலாப்பழம் மிகவும் பிடிக்கும் என்று எனக்குத் தெரியும். அதனால் தானே நான் கூட பலாப் பழத்தைச் சாப்பிடாமல் உனக்கே முழுவதும் கொடுத்தேன். இதன் விதை பூமிக்கானது. நான் விதைகளை மண்ணுக்குள் புதைத்து வைக்கவில்லை; விதைத்து வைக்கிறேன். இந்த விதைகள் செழித்து வளர்ந்து நம் வருங்காலத் தலைமுறையினருக்குப் பசி தீர்க்கப் பழங்களையும் இருக்க இடத்தையும் கொடுக்கும்" என்று குருவிக்கு எடுத்துச் சொன்னது.



குருவி தன் நண்பனின் நல்ல மனதை உணர்ந்து மனம் மாறியது. அதற்குப் பின் குருவியும் தனக்குக் கிடைத்த விதைகளை மண்ணில் ஊன்றி நல்ல செயலைத் தொடங்கியது.



✲ ✲ ✲

# புத்திசாலி முயல்



காட்டில் சிங்கமொன்று இரைதேடிக் கொண்டிருந்தது. நீண்ட நேரமாகத் தேடியும் அதற்கு எந்த இரையும் கிடைக்கவில்லை. 'அவ்வளவு தான் கொலைப் பட்டினி என்று சிங்கம் சோர்ந்து உட்கார்ந்து விட்டது. அப்போது அதன் கண்களில் ஒரு சின்ன முயல்குட்டி பட்டது. அதைக் கண்டதும் சிங்கத்திற்குக் கொஞ்சம் மகிழ்ச்சி ஏற்பட்டது. அப்பாடா... இந்தக் குட்டி முயலாவது கிடைத்ததே... இதையாவது சாப்பிடலாம்' என்று பாய்ந்து சென்று முயல் குட்டியைப் பிடித்து விட்டது.



சிங்கத்தின் வாயில் அகப்பட்ட முயல் மிகவும் பயந்து போனது. செய்வதறியாது திகைத்தது. பின்பு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பேசியது. சிங்க ராஜாவே சிங்க ராஜாவே என்னை ஏன் பிடித்துக் கொண்டு போகிறீர்கள் என்று கேட்டது. சிங்கம் எனக்குக் கொலைப்பசி... உன்னைத் தின்று என் பசியைத் தீர்த்துக்கொள்ளப் போகிறேன் என்று சொன்னது. சிங்க ராஜாவே... தாங்கள் இந்தக் காட்டிற்கே தலைவர்... என்னைப் போன்ற சிறிய விலங்கை வேட்டையாடி உண்டால் உங்களை இழிவாக நினைக்க மாட்டார்களா? காட்டுக்கே ராஜாவாம்... ஆனால் வயிற்றுப்பசிக்காக கேவலம் சின்ன முயல்குட்டியை வேட்டையாடித் தின்றதாம்... என்று கேலி பேச மாட்டார்களா? என்னை விட்டுவிடுங்கள். உங்கள் தகுதிக்கு வலிமை மிகுந்த காட்டெருமையையோ தாவி ஓடும் கலை மானையோ வேட்டையாடுங்கள்... என்னை விட்டு விடுங்கள்... என்று கூறியது.



சிங்கத்துக்கு முயல் சொன்னதைக் கேட்டு மிகவும் கோபம் வந்தது. அற்ப முயலே... உன் தகுதிக்கு என்னையா இழிவாகப் பேசுகிறாய்? இப்போதே உன்னைக் கடித்துத் தின்று பற்களால் அரைத்துத் தள்ளி விடுகிறேன் பார் என்று கொடூரமாக கர்ஜித்தது.

நாம் என்ன சொன்னாலும் இந்தச் சிங்கம் கேட்காது போலிருக்கிறதே... என்ன செய்வது... என்று முயல் யோசித்தது. திடீரென்று முயலுக்கு ஒரு யோசனை தோன்றியது. சிங்கத்திடம், சிங்க ராஜா! சிங்க ராஜா! நான் ரொம்பச் சிறியவன்... என்னைத் தின்பதால் உங்கள் பசி அடங்கி விடுமா என்ன?

அதற்கு என்ன செய்யச் சொல்கிறாய் என்று சிங்கம் கோபமாகக் கேட்டது.



கோபப்படாதீர்கள் சிங்கராஜா... பக்கத்தில் இருக்கும் புதரில் தான் என் குடும்பம் தங்கியிருக்கிறது. அங்கு போய் எல்லோரையும் அழைத்து வருகிறேன். எல்லோரையும் சாப்பிட்டால் உங்கள் பசி முழுதும் அடங்குமல்லவா? என்று முயல் சொன்னதும் சிங்கத்தின் நாவில் நீர் ஊறியது.

ஆஹா... ஒரு முயல் குடும்பமே எனக்கு இரையாகப் போகிறது... இன்றைக்கு நல்ல வேட்டை தான் என்று மனதிற்குள் சொல்லி மகிழ்ந்து கொண்டது. சரி வா... உன் புதருக்குப் போகலாம் என்று முயலைப் பிடித்துக் கொண்டு போனது.



முயல் எலிப் பொந்தைக் காட்டி, இதோ எங்கள் புதர்.... என்றது. சிங்கம் கர்ஜனையுடன் எங்கே உன் உறவினர்கள் என்று கேட்டது.

இந்தப் புதருக்குள் குழி இருக்கிறதே. அங்கு இருக்கிறார்கள்.... நான் இங்கிருந்து கூப்பிட்டால் அவர்களுக்குக் கேட்காது... அதனால் நான் போய் அவர்களை அழைத்து வருவதற்குத் தங்கள் அனுமதி வேண்டும் என்று முயல் நயமாகக் கேட்டது. சிங்கமும் புதரின் வாசலில் தான் நாம் இருக்கிறோமே? நம்மைத் தாண்டி இந்த முயல் தப்பி விடவா போகிறது என்று நினைத்து முயலை விட்டுவிட்டது.



முயல் எலிப் பொந்தின் ஒரு பக்கமாக ஓடி மறுபக்கமாகத் தப்பித்தது. சிங்கம் பசியோடு காத்திருந்தது.

புத்திசாலி முயலோ உடல் வலிமையில்லா விட்டாலும் அறிவு வலிமையைப் பயன்படுத்தித் தப்பித்தது.

# உண்மையில்லா நரி



காட்டு ராஜா சிங்கம் கர்ஜித்தது. தோழர்களே! நம் காட்டிற்குள் பக்கத்துக் காட்டு புலிக்கூட்டம் நுழைந்துள்ளதாகச் செய்தி... யாருக்காவது தெரியுமா? என்று கேள்வியைத் தொடங்கியது. நரி, யானை, கரடி, முயல் போன்ற அனைத்து விலங்குகளும் அமைதி காத்தன.

நரியாரே... எல்லைப்புறத்திற்குச் சென்று பார்த்து வாரும்... நீங்கள் கொண்டுவருகின்ற செய்தியை வைத்துத்தான் எல்லைப்புறத்திற்கு நம் படைகளை அனுப்பலாமா வேண்டாமா என முடிவுசெய்ய வேண்டும் என்றது.

சிங்கராஜா கட்டளையிட்டவாறே நரியும் எல்லைப்புறத்திற்குச் சென்றது. அங்கு புலிக்கூட்டமொன்று காட்டை மறித்துக்கொண்டு நின்றது. இதைக் கண்டு நரி கோபம் கொண்டது. புலிகளிடம் சென்று, என்ன தைரியம் உங்களுக்கு? எங்கள் காட்டுக்குள் வந்து முகாமிட்டு இருக்கிறீர்கள்... சிங்கராஜாவைக் கண்டு உங்களுக்குப் பயம் இல்லையா? என்று கேட்டது.





நரியாரே கோபப்படாதீர்கள்... எங்கள் காட்டில் உணவுப் பஞ்சம்... இங்கு நீங்கள் வளமாக வாழ்வதாகக் கேள்விப்பட்டோம்... அதனால் தான் வேட்டையாடிப் பிழைக்க இங்கு வந்துள்ளோம். நாங்கள் வந்திருப்பதை சிங்கராஜாவிடம் சொல்லிவிடாதீர்கள். நாங்கள் வேட்டையாடும் உணவில் ஒரு பகுதியை உங்களுக்குத் தருகிறோம். எப்பொழுதும் சிங்கராஜா உண்ட மிச்சம் மீதியைத் தான் நீங்கள் சாப்பிடுகிறீர்களாமே... எங்களுக்கு ஒத்துழைத்தால் எச்சில் படாத தூய உணவை உங்களுக்குப் படைக்கிறோம் என்றன.

உடனே நரியின் நாவில் நீர் ஊறியது. இருந்தாலும் தன் கடமையை விட்டுக்கொடுக்காமல், என்னை ஆசைகாட்டிக் கவிழ்த்து விடலாம் என நினைக்கிறீர்களா? ஒருபோதும் நடக்காது. நான் சிங்கராஜாவிடம் சென்று சொல்லத்தான் போகிறேன்... என்றது. புலிகளோ சற்றும் சளைக்காமல், நீங்கள் மட்டும் ஒத்துழைத்தால் உங்களை எங்கள் காட்டின் ராஜாவாக்கி விடுகிறோம்... சிங்கராஜா ஏவிய வேலைகளைச் செய்யும் வேலைக்காரனாக நீங்கள் இருக்க வேண்டாம். எங்களோடு இணைந்தால் சிங்கராஜாவையே நீங்கள் வெல்லலாம் என்றன.



நரிக்கு இதைக் கேட்டதும் பேராசை உருவானது. நான் காட்டுக்கே ராஜாவாகலாமா? சிங்கத்தையும் வெல்லலாமா? நினைக்கவே இனிக்கிறதே... நடந்து விட்டால்....??? என்று சிந்தித்த நரி சிங்கராஜாவிடம் சென்றது. வணக்கம் மன்னரே... காட்டில் பரவும் செய்தி உண்மை அல்ல. யாரோ வீணர்கள் பரப்பி விட்ட வதந்தி தான்... அப்படி எந்தப் புலிக்கூட்டமும் காட்டிற்குள் வரவில்லை என்றது. சிங்கம் அதை நம்பி விட்டது.

நான் சிங்கராஜாவை ஏமாற்றி விட்டேன். இனி யாரும் உங்களைத் தடுக்க முடியாது. உங்கள் இஷ்டப்படி காட்டிற்குள் சென்று விரும்பிய விலங்குகளை வேட்டையாடலாம். செல்லுங்கள் நண்பர்களே என்றது நரி.



புலிகள் கொடூரமாக கர்ஜித்தபடி, நரிப்பயலே வேட்டையாடக் கிளம்பி விட்டோம். முதல் வேட்டை நீ தான்... என்று நரியை நோக்கி முன்னேறின. என்ன... நானா...??? நான் உங்களுக்கு உதவி தானே செய்தேன் என்றது நரி. ஆமாம் உதவிதான்... உதவி செய்ததற்குப் பலன் வேண்டாமா? இப்பொழுது எங்கள் கண்முன் நிற்பது நீதானே... அதனால் முதல் வேட்டை நீ தான்... என்றபடி நரியின் மேல் பாய்ந்தன.

அப்போது எதிர்பாராத விதமாகப் படைகளோடு வந்த சிங்கராஜா புலிகளோடு சண்டையிட்டு விரட்டி அவைகளின் காட்டிற்கே துரத்தி விட்டது.



நரியாரே நான் உன்னை மட்டுமல்ல மந்திரி யானையாரையும் ஒற்றறிந்து வரச்சொன்னேன். அவர் உண்மையாக நடந்து கொண்டதால் நீ பிழைத்தாய்... இனியாவது நேர்மையுடன் நடந்து கொள்... இந்தக் காட்டை விட்டே ஓடிவிடு என விரட்டி விட்டது.

நரி தன் தீய குணத்தை உணர்ந்து மன்னிப்புக் கேட்டபடி காட்டை விட்டே ஓடிப்போனது.

